# இலக்கியங்கள் காட்டும் வணிக மேலாண்மை - ஒரு விரிவான ஆய்வு

8

முதுமுனைவர் அ.இராஜலட்சுமி
உதவிப்பேராசிரியர் & தலைவர் (பொ.)
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
கோயம்புத்தூர்-641029
harivardhini1108@gmail.com

**சுருக்கம் (Abstract)**

வணிக மேலாண்மை என்பது நவீன காலத்தில் உருவான அறிவியல் துறையாகக் கருதப்பட்டாலும், அதன் அடிப்படைச் சிந்தனைகள் தமிழிலக்கியங்களில் தொன்மைக் காலத்திலிருந்தே வாழ்வியல் அறநெறிகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்கள் முதல் நவீன தமிழிலக்கியங்கள் வரை திட்டமிடல், முடிவெடுத்தல், தலைமையியல், தொடர்பியல், வணிக ஒழுக்கம், உலகமயமாக்கல், சூழலியல் மேலாண்மை போன்ற மேலாண்மை கூறுகள் தெளிவாகக் காணப்படுகின்றன. இவ்வாய்வுக் கட்டுரை, தமிழிலக்கியங்களில் பிரதிபலிக்கும் வணிக மேலாண்மைச் சிந்தனைகளை இலக்கியச் சான்றுகளுடன் ஆய்வு செய்து, அவற்றின் நவீன வணிகச் சூழலுக்கான பயன்பாட்டை விளக்குகிறது.

**திறவுச்சொற்கள் :**

வணிக மேலாண்மை, தமிழிலக்கியம், சங்க இலக்கியம், திருக்குறள், காப்பியங்கள், தலைமையியல், தொடர்பியல்.

**முன்னுரை**

ஒரு நிறுவனம் அல்லது அமைப்பு தன்னுடைய இலக்குகளை அடைய மனித வளம், பொருள் வளம், நிதி வளம் ஆகியவற்றைத் திட்டமிட்டு ஒருங்கிணைக்கும் செயல்முறையே மேலாண்மை எனப்படுகின்றது. இன்றைய வணிக உலகில் மேலாண்மை என்பது அறிவியல், தொழில்நுட்பம், தரவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் செயல்படுகிறது. எனினும், மனிதனின் மனநிலை, சமூக ஒழுக்கம், நீதிநிலை போன்ற அடிப்படைப் பண்புகள் இல்லாமல் எந்த மேலாண்மையும் வெற்றியடைய முடியாது. இத்தகைய மனிதநேய மேலாண்மைச் சிந்தனைகளையே தமிழிலக்கியங்கள் தொன்மைக் காலத்திலிருந்தே வலியுறுத்தி வருகின்றன.

**மேலாண்மை – கருத்தியல் விளக்கம்**

மேலாண்மை என்பது வெறும் நிர்வாகச் செயல் மட்டுமல்ல; அது ஒரு சமூகப் பொறுப்பு ஆகும். மேலாண்மையின் அடிப்படை கூறுகளாக

- திட்டமிடல்
- ஒழுங்கமைத்தல்
- வழிநடத்தல்
- தொடர்பியல்
- கட்டுப்படுத்தல்

என்பவை கருதப்படுகின்றன. இக்கூறுகள் அனைத்தும் தமிழிலக்கியங்களில் அரசர், தலைவன், குடும்பத் தலைவர் போன்றவர்களின் செயல்பாடுகளாக வெளிப்படுகின்றன.
குமர குருபரர் எழுதிய பாடலுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். நீதி நெறி விளக்கத்தில் 53ஆவது பாடலாக இது மலர்கிறது.

- மெய் வருத்தம் பாரார், பசி நோக்கார் கண் துஞ்சார்,

  எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் – செவ்வி

  அருமையும் பாரார், அவமதிப்பும் கொள்ளார்

  கருமமே கண்ணாயினார் ( நீதிநெறி விளக்கம் 53)

இதனையே

- வினையே ஆடவர்க்கு உயிரே வாணுதல்
  மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் என

  நமக்கு உரைத்தோரும் தாமே,
  அழா அல் தோழி! அழுங்குவர் செலவே

- குறுந்தொகை 135 ஆம் பாடல் கூறுகிறது.

தொழில் அல்லது செயல்பாடுதான் ஆண்களுக்கு உயிர் போன்றது; அதைச் செய்பவர்கள் துன்பங்களைப் பொருட்படுத்த மாட்டார்கள் என்பதாகும். மேலும் இதன் தொடர்ச்சியாக, “மனையில் வாழும் பெண்களுக்குக் கணவரே உயிர்” என்றும் கூறப்பட்டுள்ளது, இது ஆண்கள் மேற்கொள்ளும் செயல்களின் அவசியத்தையும், குடும்பத்தின் பொருளாதார நலனுக்காக அவர்களின் உழைப்பு எவ்வளவு முக்கியம் என்பதையும் வலியுறுத்துகிறது.
சங்க இலக்கியங்களில் வணிக மேலாண்மை

உலகமயமாக்கல்
புறநானூற்றில் கணியன் பூங்குன்றனார் கூறும்

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” ( புறம் 192)

என்ற வரி, உலக மக்கள் அனைவரும் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உயர்ந்த மனிதநேயக் கருத்தை முன்வைக்கிறது. இக்கருத்து இன்றைய Globalisation கோட்பாட்டின் அடித்தளமாக விளங்குகிறது. நவீன வணிக உலகில் எல்லை கடந்த வர்த்தகம், பன்னாட்டு நிறுவனங்கள், உலகளாவிய சந்தைகள் உருவாகியிருப்பதை இதனுடன் ஒப்பிடலாம்.

**வள மேலாண்மை மற்றும் நிலைத்த வளர்ச்சி**

சங்க கால அரசர்கள் நீர்நிலைகள், விவசாய நிலங்கள், வர்த்தகப் பாதைகள் ஆகியவற்றை பாதுகாத்தனர். இது வளங்களைப் பாதுகாத்து நீடித்த வளர்ச்சியை அடையும் Sustainable Business Management கருத்தை ஒத்ததாகும். இன்று நிறுவனங்கள் சுற்றுச்சூழல் பொறுப்புடன் செயல்பட வேண்டிய அவசியத்தை சங்க இலக்கியங்கள் மறைமுகமாக எடுத்துரைக்கின்றன.

நீரைச் சேமித்து வைத்து, மழை இல்லாக் காலங்களில் பயன்படுத்தச் செய்யுமாறு குடபுலவியனார் ன்னும் பலவர், பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு

“நிலன் நெளிமருங்கின் நீர்நிலை பெருகத் தட்டோரம்ம இவன் தட்டோரே தள்ளாதோர் இவண் தள்ளாதோரே” (புறம். 18:28-29)

என்று அறிவுறுத்துகிறார். இயற்கை வளத்திற்கு மூலமான நீர் ஆதாரத்தைப் பெருக்குவதே மன்னனது தலையாய கடமையாகும் என்பதைக் இவ்வாறு குறித்துள்ளார். “எங்கெங்கு நீரைச் சேமித்துவைக்க முடியுமோ அங்கெல்லாம் சேமித்து வைத்துக் கொண்டு, சேமித்தவற்றைத் தேவைப்படும் காலங்களில் பயன்படுத்திக் கொள்வதே சிறந்த அறிவுடைமையாகும்” என்ற கருத்தினைச் சங்கப் புலவர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

உழவுத்தொழில் குறித்து,

- ‘‘மிதியுலை கொல்லன் முறிகொடிறன்ன
  கவைத் தாளலவன் அளற்றளை சிதையப்
  பைஞ்சாய்கொன்ற மண்படு மருப்பிற்
  காரேறு பொருத கண்ணகன்செருவின்

  உழா நுண்டொளி நிரவிய வினைஞர்” என்று பெரும்பாணாற்றுப்படை (207 -11) கூறுகிறது.

நீர்நிலம் சண்டையிட்டுக்கொள்ளும் எருமை மிதித்துச் சேறாகும். அங்கு உழவு செய்யாமல் உழவர் பயிரிடுவர் என்ற செய்தியால் நீர் வளமும் உழவுத்தொழில் சிறப்பும் தெரிய வருகின்றது.

**சிலப்பதிகாரமும் மேலாண்மையும்**

சிலப்பதிகாரம் மேலாண்மையில் முடிவெடுப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் சிறந்த காப்பியமாகும். பாண்டிய மன்னன் கோவலனை விசாரணையின்றி தண்டித்தது ஒரு தவறான நிர்வாக முடிவாகும்.

நவீன மேலாண்மை கோட்பாடுகளின்படி, முடிவெடுப்பு என்பது
பிரச்சினையை அடையாளம் காணுதல்
தகவல்களைச் சேகரித்தல்
மாற்றுத் தீர்வுகளை மதிப்பிடுதல்
சரியான தீர்வைத் தேர்வு செய்தல்
என்ற படிநிலைகளை உடையது. இவை புறக்கணிக்கப்பட்டால் ஏற்படும் விளைவுகளை சிலப்பதிகாரம் தெளிவாகக் காட்டுகிறது.

- பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட
  யானோ அரசன் யானே கள்வன்
  மன்பதை காக்கும் தென்புலம் காவல்
  என்முதல் பிழைத்தது கெடுகவென் ஆயுள்என

  (வழக்குரை காதை: 74-77)

இவ்வாறு அரசன் தன் தவற்றை உணர்ந்ததும், தன்னுயிர் நீத்து நீதியை நிலை நிறுத்தினான்.

**அகநானூறு காட்டும் திட்டமிடல்**

அகநானூறு சமூக வாழ்க்கை ஒழுங்கமைப்பை வெளிப்படுத்தும் நூல். ஔவையார் பாடல்கள் சமூக வளர்ச்சிக்குத் திட்டமிடல் அவசியம் என்பதை உணர்த்துகின்றன.

- அறன்கடைப்படாஅ வாழ்க்கையும் என்றும்
  பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்
  பொருளின் ஆகும் புனையிடை என்றுநம்
  இருளெர் ஐம்பால் நீவியோரே
  நோய்நாம் உழக்குவ மாயினும் தாம்தம்

  செய்வினை முடிக்க தோழி'' (அகம்.,155)

என்று மருதன் இளநாகனார் பாடுகிறார். இப்பாடலில் கணவனது அறவுணர்வும், மான உணர்வும், மிக்கிருப்பதை புலவர் சுட்டி கணவன் இல்லறக் கடமை உணர்ந்து செயல்படல் வேண்டும் என்றும் மொழிவது குறிப்பிடத்தக்கது.

பல இலக்கியப் பாடல்கள் மேலாண்மை மற்றும் பொருளாதார திட்டமிடலின் அடிப்படை உண்மையைச் சுட்டிக்காட்டுகிறது. இது இன்று அரசுகள் மற்றும் நிறுவனங்கள் மேற்கொள்ளும் Strategic Planning-க்கு ஒப்பானது.

**கம்பராமாயணத்தில் மேலாண்மைச் சிந்தனைகள்**

**தலைமையியல் பண்பு (Leadership)**

கம்பராமாயணத்தில் இராமன் ஒரு சிறந்த தலைவராகக் காட்டப்படுகிறார்.

- மக்களை நம்பும் தன்மை
- நியாயமான தீர்ப்புகள்
- தொலைநோக்கு பார்வை

- துன்ப நேரங்களில் தைரியம்

இவை அனைத்தும் நவீன Transformational Leadership கோட்பாட்டின் பண்புகளாகும்.
இராமனை முடிசூட்டு விழாவிற்கு ஆயத்தப்படுத்துவது போன்று வசிட்டர் பல அறிவுரைகள் கூறுகிறார். அதாவது உலகனைத்துக்கும் பொதுவான பெருமையான அன்பினைப் பற்றி கூறும்போது அன்பினைத் தவிர ஆக்கம் தருவது வேறொன்றில்லை என்பதாக காட்டுகிறார். அதாவது,

- முன்பு பின்பு இன்றி மூவுலகத்திலும்,

அன்பின் நல்லது ஓர் ஆக்கம் உண்டாகுமோ (1422)

என்று கூறுகிறார்.

### தொடர்பியல் (Communication)

இராமன்–சீதை உரையாடல், இராமன்–ஹனுமான் உரையாடல் ஆகியவை தெளிவான, நேர்மையான தொடர்பியலின் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

மாறாக, சுக்ரீவன்–வாலி இடையே ஏற்பட்ட தவறான புரிதல், தகவல் பரிமாற்றம் இல்லாதால் ஏற்படும் நிர்வாகப் பேரழிவை உணர்த்துகிறது.

### திருக்குறளும் வணிக ஒழுக்கமும்

திருக்குறள் வணிக மேலாண்மைக்கான ஒழுக்க நெறிகளைத் தெளிவாக வகுத்துக் காட்டுகிறது.

தவறான வழியில் ஈட்டிய செல்வம் நீடிக்காது

திட்டமிடல் இல்லாத செயல் தோல்வியடையும்

தலைவருக்கு அறிவு, துணிவு, கருணை அவசியம்

இவை இன்றைய Business Ethics மற்றும் Corporate Governance கோட்பாடுகளுக்கு இணையானவை.

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்[து]ஒருபால்

கோடாமை சான்றோர்க்[கு] அணி. [0118]

என்கிறார்.

துலாக்கோல் முதலில், தான் சமநிலையில் அமைந்திருக்கும்; பின்னர்த் தன்னிடம் வைக்கப்பட்ட பொருள்களின் எடையை மிகச் துல்லியமாகக் காட்டும். அது எப் பொருளின் பக்கமும் சாயாது.

அதுபோலச் சான்றோர்களும் ஒரு பக்கம் சாயாமல் தாங்களும் சம நிலையில் அமைந்திருப்பார்கள்; ஒரு பக்கம் சாயமாட்டார்கள்.

நடுவு நிலைமைக்குக் குறியீடாக அமைந்த தராசுதான் வணிகத்தின் முதன்மைக் கருவி – அடிப்படைக் கருவி. அந்தத் தராசுபோல் வணிகர் தம்மையும் வாடிக்கையாளரையும் சமமாகவே மதிக்க வேண்டும். எனவே அது வணிகக் குறியீடாக இருக்கிறது. இவற்றையெல்லாம் நுண்ணாய்வு செய்த நல்லறிஞர் திருவள்ளுவர்,

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்

பிறவும் தமபோல் செயின் [0120]

எனும் இத் திருக்குறட் பாவை நடுவு நிலைமை அதிகாரத்தில் அமைத்தார்.

**சூழலியல் மேலாண்மை**

வணிகச் சூழல் என்பது

1. **பொதுச் சூழல் (பொருளாதாரம், சமூக–பண்பாடு, அரசியல்–சட்டம், தொழில்நுட்பம்)**

தொழில் பெருக்கம் என்பது நாளும் வளர்ந்து கொண்டே இருப்பது. இன்றைய தேவையை மட்டும் கருத்தில் கொண்டு எதிர்காலச் சிந்தனை இன்றி நடத்தப்படும் தொழில்கள் நாளடைவில் நலிவடைந்து விடும். ஆதலால். எதிர்காலத் தொழில் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு உற்பத்தியை மேற்கொள்ளும் நிறுவனங்களே நிலைத்து நிற்கும் என்பதனை,

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும் எஃகதனிற் கூரிய தில்

(குறள். 759)

என்னும் குறளில் குறிப்பிடுகிறார். எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்கும் தொழில்களே காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதாகவும், நிலைத்து நிற்கத்தக்கதாகவும் இருக்கும் என்பது இதன்வழியாக உணர்த்தப்படுகிறது.

2. பணிச் சூழல் (வாடிக்கையாளர்கள், வழங்குநர்கள், போட்டியாளர்கள், நிதி நிறுவனங்கள்)

- “இதனை யிதனா லிவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை யவன் கண்விடல்” (தெரிந்து வினைசெயல்வகை 517)

இந்த வேலையை இந்தத் திறமையுள்ள இவரைக் கொண்டு முடிக்கலாம் என்பதை நன்கு ஆராய்ந்து, அந்த வேலையை அவரிடமே ஒப்படைக்க வேண்டும். இது Job-person fit என்ற நவீன HR கொள்கையை ஒத்துள்ளது.

என இருவகைப்படுகிறது. இலக்கியங்களில் இந்தச் சூழல்களைப் புரிந்து செயல்பட்ட அரசர்கள் வெற்றியடைந்ததாக பல பாடல்களில் காண்கிறோம்.

**நவீன தமிழிலக்கியமும் வணிக மேலாண்மையும்**

சுப்ரமணிய பாரதியார் போன்ற நவீன கவிஞர்கள்,

- சுயமுயற்சி
- உறுதியான நோக்கு
- விடாமுயற்சி
- சமூக பொறுப்பு

ஆகிய மேலாண்மை மதிப்புகளை வலியுறுத்துகின்றனர். “மனதில் உறுதி வேண்டும்” என்ற சிந்தனை, ஒரு தொழில்முனைவோரின் அடையாளமாக விளங்குகிறது.

முடிவுரை

தமிழிலக்கியங்கள் மனித வாழ்க்கைக்கான அறநெறிகளை மட்டுமல்ல, வணிக மேலாண்மைக்கான வழிகாட்டுதல்களையும் வழங்குகின்றன. சங்க காலத்திலிருந்து நவீன காலம் வரை இலக்கியங்களில் வெளிப்படும் திட்டமிடல், முடிவெடுப்பு, தலைமையியல், தொடர்பியல், ஒழுக்கம் ஆகியவை இன்றைய வணிக உலகிற்கு மிகவும் பொருத்தமானவை. எனவே, இலக்கியங்களை மேலாண்மை நோக்கில் ஆய்வு செய்வது கல்வியியல் ரீதியாகவும் சமூக வளர்ச்சி ரீதியாகவும் அவசியமானதாகும்.

**துணை நூற் பட்டியல்**


(பெயர் – பதிப்பு – ஆண்டு – பதிப்பகம்)

திருக்குறள்

- உரை: பரிமேலழகர்
- பதிப்பு: 1-ஆம் பதிப்பு
- ஆண்டு: 2002
- பதிப்பகம்: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை

புறநானூறு

- உரை: உ.வே.சாமிநாதையர்
- பதிப்பு: 1-ஆம் பதிப்பு
- ஆண்டு: 1999
- பதிப்பகம்: கழக வெளியீடு, சென்னை

அகநானூறு

- உரை: நச்சினார்க்கினியர் (ஆராய்ச்சிப் பதிப்பு)
- பதிப்பு: 1-ஆம் பதிப்பு
- ஆண்டு: 2001
- பதிப்பகம்: தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

சிலப்பதிகாரம்

- உரை: அடியார்க்கு நல்லார்
- பதிப்பு: 2-ஆம் பதிப்பு
- ஆண்டு: 2000
- பதிப்பகம்: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை

கம்பராமாயணம்

- ஆசிரியர்: கம்பர்
- உரை: வி.மு. கோபாலகிருஷ்ணமாசாரியார்
- பதிப்பு: 1-ஆம் பதிப்பு

- ஆண்டு: 1998
- பதிப்பகம்: சாரதா பதிப்பகம், சென்னை

நீதிநெறி விளக்கம்

- ஆசிரியர்: குமரகுருபரர்
- பதிப்பு: 1-ஆம் பதிப்பு
- ஆண்டு: 2005
- பதிப்பகம்: கழக வெளியீடு, சென்னை

Management Concepts in Ancient Tamil Literature

- ஆசிரியர்கள்: M. Ramani & R. Magesh
- Edition: First Edition
- Year: 2015
- Publisher: Shanlax Publications, Madurai

தமிழிலக்கியங்களில் மேலாண்மைச் சிந்தனைகள்

- ஆசிரியர்: முனைவர் க. நாகராஜன்
- பதிப்பு: 1-ஆம் பதிப்பு
- ஆண்டு: 2012
- பதிப்பகம்: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

வணிக ஒழுக்கமும் திருக்குறளும்

- ஆசிரியர்: முனைவர் ச. ராமச்சந்திரன்
- பதிப்பு: 1-ஆம் பதிப்பு
- ஆண்டு: 2010
- பதிப்பகம்: முல்லை நிலையம், சென்னை